[திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்] [2020 பிப்ரவரி 19

குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்றும், 816 கிராமங்களுக்கான குடிநீர் அபிவிருத்தித் திட்டத்திற்காக 72.65 கோடி ரூபாய்க்கான கருத்துருவை விரைந்து செயல்படுத்துமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் பிப்ரவரி 15–ல் ஒரு கடிதம் எழுதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் இதுகுறித்து சொல்லியிருக்கிறேன். குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்த்திட எந்த திட்டமாக இருந்தாலும், உடனடியாக நிறைவேற்றப்படும் என்ற உத்தரவாதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களும் அளித்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கு அறிவுரை வழங்கியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் மற்றும் திண்டுக்கல் மாவட்டத்தைச் சார்ந்த அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களோடும் கலந்துபேசி, அங்கு நிலவும் குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

9. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2020

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகத்தில் பொறுப்புடைமை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12-20

10. வரவு—செலவுத் திட்டம், 2020-2021, பொது விவாதம்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2020-2021 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.டி.கே. ஜக்கையன் அவர்கள்.*

திரு. எஸ்.டி.கே. ஜக்கையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய அன்பான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். அன்றும், இன்றும், என்றும் மக்கள் மனங்களில் நிரந்தரமாக குடிகொண்டுள்ள கழகத்தின் நிறுவனத் தலைவர், மக்கள் திலகம், மன்னாதி மன்னன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களின் நினைவைப் போற்றுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) விண்பூத்த புகழாக வியாபித்த பொன்மனத் தாய்; பொன்பூத்த மண்ணுக்கும் இந்த மானுடத்துக்கும் புகழ் சேர்த்த தியாகத் தாய்; தாய் வடிவாய் தமிழ் இனத்தின் வரமாய் வந்து கழகத்தையும், தமிழகத்தையும் காத்து வளர்த்திட்ட தருமத் தாய், இதய தெய்வம் அம்மா அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி பணிந்து வணங்குகிறேன். நடுநிலை தவறாமல், அவையின் மாண்பும், மதிப்பும் கெடாமல், விதிப்படியும், மரபுப்படியும் செயல்பட்டு அனைவரையும் அரவணைத்து இந்தப் பேரவையை*